முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1469

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**07.10.2023**, சனிக்கிழமை

1. உயிர்கொலை நீக்கி உத்தமர்களாய்
உலகோரெல்லாம் ஞானிகளாவதர்க்கு
தயவாக பெருஞானம் அருளுகின்ற
தர்மனே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர்யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 20 ம் நாள், 07.10.2023, சனிக்கிழமை)
வரமாக உன்னுள் யானே கலந்து
வையகத்தைக் காக்கும் மகா சக்தியாக
3. ஆகவே தீட்சைதனை உலகோர்க்கு
ஆற்றலாக அரங்கன் உன் கரம்பட வழங்கி வருகின்றேன்
வருகவே உன் தொடர்பாலே
வையகம் ஞான லோகம் ஆவது உறுதியப்பா
4. தருகின்ற உன் அமுதாலே
தரணியெங்கும் பசிபிணி வறுமை விலகுவது உறுதியப்பா
உறுதி தந்து உன்னுள் யானிருக்கேன்
உத்தமர்களாய் உன்னை பின்பற்றும் உயர் சீடர்கள் அனைவருமே
5. சத்தியவான்களாக இந்த கலியில்
சரணாகதியால் ஞானிகளாவரப்பா
அப்பப்பா அரங்கன் தர்மம் அளவில்லா மாதர்மமாகும்
ஒப்புகொண்டேன் உன் தர்மத்தை ஏற்று
6. உன் சன்மார்க்கத்தையும்
உலகமெங்கும் வேதமாக்கி
ஆக்கியே ஆறுமுகன் யான் அகிலத்தில்
அரங்கன் உன் அவதாரத்தின் நோக்கத்தை

7. நோக்கத்தை உயர்வாக நிறைவேற்றுவேன்
நிலவுலகில் அரங்கன் உன்
ஞான பலத்தால் நிலமதனில்
ஞான ஆட்சி உருவாகவும்
8. வேலவன் யான் அற்புதம் நடத்துவேன்
விரைந்து தொண்டர்படைகள் அளவிலாப் பெருகி
வையகத்தில் அரங்கன் உன் அவதாரம் பூர்த்தியாகும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—